# சமூகவியல் பார்வையில் சித்தர்களும் பாரதியும்

**முனைவர் அ. கணேசன்**
தமிழ்த்துறை
கௌரவப் பேராசிரியர்
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி
சிவகாசி

**மலர்:** 3
**இதழ்:** 3
**தொகுதி:** II
**மாதம்:** ஜனவரி
**வருடம்:** 2019
**ISSN:** 2454-3993

ஐந்தறிவு பெற்ற விலங்குகளிலிருந்து பரிணாமம்பெற்ற ஆறறிவுஜீவியே மனிதன். அவன் அவைகளிலிருந்து வேறுபடவும், மாறுபட்டுச் சிந்திக்கவும் காரணம் பகுத்தறிவு சிந்தையாம். இச்சிந்தைகளை மக்களிடம்கொண்டு சென்று, அறியாமையில் மூழ்கிக் கிடக்கும் சமுதாயத்திற்கு விழிப்புணர்வை ஏற்படுத்திய தமிழ் மகான்கள் பல்லோர் உள்ளனர். எனினும் அவர்களில் சமய இலக்கியங்கள் தொட்டு இக்கால இலக்கியங்கள்வரை தமிழின ஒளிச்சுடராய் விடிவெள்ளியாய்த் திகழ்வார் பலருண்டு. இவ்வரிசையில் சித்தர்களும் பாரதியும் சமூகத்தில் புரையோடிக்கிடக்கும் அறியாமை என்னும் இருளை வீறுகொண்டு விரட்டிய செய்தியைப் புலப்படுத்துவதாய் இக்கட்டுரை அமைகிறது.

## சமூகவியல் நோக்கு

மனிதன் பகுத்தறிவுபெற்ற காலத்திலேயே சமயங்கள் தோன்றலாயின. வாழ்க்கையின் முன்னோடியாய்த் திகழ்ந்த புத்தர், அருகதேவர், ஏசுகிறித்து, முகமது நபி ஆகியோர் மானுட ஒழுக்கத்தை மாண்புறச் செய்தவர்கள். அவர்களின் அடியாரும் தொண்டருமே சமயங்களை உருவாக்கினர். இச்சமயங்களே மக்களை அறியாமை எனும் இருளில் மூழ்கச் செய்தன. இவை நாற்புறமும் பாய்ந்தோடி காலப்போக்கில் மதங்களாக மாறின. இந்நிலையில்தான் மனிதஇனம் பூசலும் போராட்டமும் நிறைந்து, மதத்தின் பெயரால் அறிவு வாசலை மூடி, அழிவை நோக்கிப் பயணித்தது. இந்தக் காலக்கட்டத்தில் தோன்றியவர்களே சித்தர்கள் என்னும் பகுத்தறிவுப் பகலவர்கள். இச்சித்தர்கள் பற்றி தெ.பொ.மீ அவர்கள், “சித்தர்கள் உடல் வருத்தி வாடி உயர்நெறி சேர்வர். ஒளி ஒன்று தோன்றி மறையும். உலகத்துன்பம் பெரிதாய்த் தோன்றும். ஒளியைப் புரிந்த நிலை மிகமிக வாட்டும். சித்தர்கள் நினைவு வலுப்பெற, பேரின்பப் பேரொளி விட்டுவிட்டன்றி, முற்ற முடியத் தொடர்ந்து தோன்றும். அப்பேரின்பத்தின் முடிவாக ஆழ்ந்து ஒன்றிவிடுவர். இந்த நான்கு நிலைகளையும் சித்தர் பாடல்களில் காணலாம்”[1]எனக் கூறியிருப்பது பொருத்தமுடையது. பாழ்பட்ட தமிழ்ச் சமுதாயத்திற்கு விழிப்புணர்வைத் தரும் விவேகிகளாகச் சித்தர்கள் விளங்கியதால், அவர்களை உணர்ந்த சான்றோர்களும் சித்தர்களாயினர். இச்சித்தர்களைப் பித்தர்கள் எனக் கூறுவாரும் உள்ர்.

“தன்னைக் காப்பாற்றாதவன் தன்னை இழந்துவிடுவான். தன்னை இழப்பவன் தன்னைக் காப்பாற்றிக் கொள்வான்” [2] என்ற முதுமொழிக்கேற்ப சித்த மருத்துவம், இயற்கை மருத்துவம் எனக்கூறி, வாழ்வு நெடிதுய்ய வழிகாட்டியவர்கள் அவர்கள். அதுபோல உயிர் சிறக்க ஆன்மீகம்

தூய்மைபெற, சீர்மைபெற அன்பு அறிவு என எதையும் உணரும்தன்மை, எண்ணத்தில் தெளிவு இவற்றைத் தெளிவாக்கினர். சித்தர்கள் என்றால் அறிபடைத்தவர்கள், அறிஞர்கள், மேதைகள், பேரறிவு படைத்தவர்கள், நுண்ணறிவுகொண்டவர்கள், விஞ்ஞானிகள், மெய்ஞ்ஞானிகள் எனப் பலவாறு போற்றப்படுகின்றனர்.

"சத்தியமே வேணுமடா மனிதனானால்
சண்டாளஞ் செய்யாதே தவறிடாதே"[3]

என்று கூறியிருப்பது சத்தியம்கொண்டு மானிடர் நேர்மையாகவும் வாழ்வாங்கு வாழவும், மாற்றாருக்கும் தீமை செய்வதாகாது எனக் கடிந்துரைப்பதும் சமுதாய மறுமலர்ச்சிக்கான வித்துகள்.

மனுதர்மங்கள், சாத்திரங்கள் படைத்த ஆரியர்கள் தங்களைக் கடவுளின் அவதாரமாகக் கூறிக்கொண்டு, சாத்திரநெறிகளைத் தமக்குச் சாதகமாகவே ஆக்கினர். இதனைப் பின்தொடர்ந்ததன் காரணமாகவே சமுதாயத்தில் மூடநம்பிக்கையும் அறியாமை இருளும் பரவத்தொடங்கின. இவ்விச்ருளைப் போக்கும்விதமாக பகுத்தறிவுச் சிந்தனையாளர்கள் உருவாகினர். அவ்வரிசையில் சித்தர்களைப் போலவே பாரதியும் தமது காலக்கட்டத்தில் புரையோடிக்கிடந்த சமுதாய ஏற்றத்தாழ்வு, சாதியப் பாகுபாடு, மதஇனப்பிரிவினைகள், பெண்ணடிமை ஆகியவற்றைச் சுட்டிக்காட்டிதோடு மட்டுமன்றி, அவர்கள் மனதில் அறிவு ஒளியையும் ஏற்றினார்.

**சமுதாய ஏற்றத்தாழ்வு**

மக்களிடம் சமுதாய ஏற்றத்தாழ்வு என்பது சாதியின் பெயரைச் சுட்டியே இருந்தது என்பதைச் சித்தர் தம் பாடலில் கூறியிருக்கிறார்.

"பறைச்சியாவது ஏதடா? பணத்தியாவது ஏதடா?
"இறைச்சி தோல் எலும்பினும் இலக்கமிட்டு இருக்குமோ?
"பறைச்சி போகம் வேறதோ? பணத்தி போகம் வேறதோ?
"பறைச்சியும் பணத்தியும் பகுத்துப் பாரும் உம்முளே."[4]

என்ற பாடல் வரிகள் அதிகார வர்க்கத்திலிருக்கும் பார்ப்பனர் மனைவியையும் விளிம்பு நிலையில் உள்ள பறைச்சியினையும் குறிப்பிடுகின்றன. இதில் மேல்நிலை, அடிநிலை எனக் குறிப்பிட்ட சித்தர், இவர்களைப் பகுத்துப் பார்த்தால் என்ன தெரியும்? என்று வினவுகிறார். இவர்போலவே பாரதியாரும் தாம் வாழ்ந்த காலத்தின் சமுதாய அவலத்தைக் குறிப்பிட்டுள்ளார். தன்னை உயர்ந்தோராகப் பாவித்துக்கொண்டு மற்றவர்க்கு அறிவுரை பகர்வார் மத்தியில், வாய்திறந்து பேசாத மௌனியாக விளங்கும் மக்களை,

"அச்சமும் பேடிமையும்
"அடிமைச் சிறுமதியும்
"உச்சத்தில் கொண்டாரடி – கிளியே
"ஊமைச் சனங் களடி!"[5]

என்ற பாடல் வரிகளில் நொந்து பாடுகிறார். அச்சங்கொண்டு அடிமையாகவும், விசாலமான சிந்தனை இல்லாதவர்களாகவும் இருந்த மக்களைக் கண்டதனால்தான் "பேடிமை" என்றும், "சிறுமதி" என்றும், "ஊமைச் சனங்கள்" என்று பாட்டில் புனைந்துள்ளார்.

**சாதியப் பாகுபாடு**

மனிதர்கள் ஒன்றுகூடி கூட்டமாக, , ஒற்றுமையாக வாழ்ந்த நிலையில் அவர்களைப் பிரித்தாளும் முயற்சியால் உருவாக்கப்பட்டதே சாதி என்னும் முறையாகும். உருவாலும், மொழியாலும் தன்னை வேறுபடுத்த சமூகமாக்கியவர்கள் தம் எண்ணங்கள் நிறைவேறும் பொருட்டு பலஅடுக்கு முறைகளாக சமூகம் கட்டமைக்கப்பட்டது. இதுகண்ட சித்தர் தம்பாடலில் இச்சாதியக் கட்டமைப்பு முறையை,

**"சாதியாவது ஏதடா? சலம்திரண்ட நீரெல்லாம்**
**"பூதவாசல் ஒன்றலோ, பூதம் ஐந்தும் ஒன்றலோ?**
**……..**
**"சாதிபேதம் ஓதுகின்ற தன்மை என்ன தன்மையோ?"[6]**

என்று சாடியிருப்பது இங்கே நோக்கத்தக்கது. மனிதரில் சாதியாவது ஏதுமில்லை. தசையாலும், எலும்பாலும், குருதியாலும் சூழப்பட்ட உடம்புக்குப் பூதவாசல் ஒன்றுமட்டுமே. அனைவருக்கும் ஐந்து பூதங்களும் ஒன்றாகவே மனித உடலில் அனைத்தும் அமைந்திருக்கும் பொழுது தசைப்பிண்டமாய் விளங்கும் அதற்கு ஏன் சாதிபேதம் கூறல்வேண்டும். அவ்வாறு கூறுவதும் என்ன தன்மையோ? என வினவுவது சமூகத்திற்கோர் சவுக்கடியாகும்.

சித்திரைப் போலவே பாரதியாரும் சாதியப் பிரிவுகளால்வரும் சண்டைசச்சரவுகள் மனித இனத்தைச் சீர்குலைக்கும் என்பதை நினைவுபடுத்துகிறார்.

**"சாதிப்பிரிவுகள் சொல்லி – அதில்
தாழ்வென்றும் மேலொன்றும் கொள்வார்
நீதிப்பிரிவுகள் செய்வார் - அங்கு
நித்தமும் சண்டைகள் செய்வார்."[7]**

என்று கூறுவது சாதி என்னும் சொல்லைச் சொல்லிச்சொல்லியே அதை மறக்கவிடாமல் நினைவுபடுத்திக்கொண்டு, மக்களின் உள்ளங்களைக் காயப்படுத்திக்கொண்டே இருக்கின்ற நிலையைக் காட்டுகிறது. அந்தச் சொல்லால் உயர்ந்தவர்கள் என்றும், தாழ்ந்தவர்கள் என்றும் கூறிப் பிரித்தாளும் முயற்சியையும், நீதி வழங்கும் முறையில் வேற்றுமை கண்டு நித்தமும் சண்டைகள் இடச் செய்திடுவார்கள் என்பதையும் காணமுடிகிறது.

**சமய வேறுபாடு**

சிந்தனையாலும், பகுத்தாராயும் அறிவாற்றலாலும் சமூக விடியலுக்குத் தோன்றிய மகான்கள் மத்தியில், சில மதம்பிடித்த சீடர்களாலே சமுதாயம் சீர்கெடத் தொடங்கியது. இந்நிலையில் தோற்றுவிக்கப்பட்டது தான் கோயில்கள், குளங்கள், தெய்வங்கள் என்பனவாம். இவற்றைப் புறநிலையில் உருவங்களாக தோற்றுவித்து அங்கும் இங்கும் தேடி அலையும் மக்களுக்குச் சித்தர் உண்மைநிலையை நினைவுபடுத்துகிறார்.

**"கோயிலாவது ஏதடா குளங்களாவது ஏதடா?
கோயிலும் குளங்களும் கும்பிடும் குலாமரே
கோயிலும் மனத்துளே குளங்களும் மனத்துளே
ஆவதும் அழிவதும் இல்லை இல்லை இல்லையே"[8]**

என்னும் பாடலில் கோயில்களும் குளங்களும் தெய்வத்தை முன்னிருத்திக் கட்டவும் வேண்டாம் வெட்டவும் வேண்டாம் என்று கூறி, அவை நம் உடம்பினுளே பொதிந்து கிடக்கின்றன என்ற உண்மையை உணரவைக்கிறார். அவர் போலவே பாரதியாரும் சாத்திரங்கள், கோத்திரங்கள் கூறிப் பிரித்தாளும் வேதம் ஓதுவார்களைப் பற்றி அறியச் செய்கிறார்.

**"தோத்திரங்கள் சொல்லியவர் தாம் – தமைச்
சூது செய்யும் நீசர்களைப் பணிந்திடுவார்."[9]**

என்ற பாடல் வரிகளால் தோத்திரங்களைக் கூறி, தந்திரத்தாலும் பிரித்தாலுகிறவர்களை அவர்களையே "நீசர்கள்" எனக் கடுஞ்சொல்லால் விமர்சிக்கிறார்.

**ஒளிகொடுத்த விடிவெள்ளிகள்**

மக்களிடம் அறியாமை இருள் சூழ்ந்து மையங்கொண்ட காலத்தில் அவர்தம் நிலைப்பாட்டுக்குக் காரணம் என்ன? என்று சிந்தித்ததன் விளைவே விடுதலை வேட்கை ஆகும். இனம், மதம், மொழி, நிறம் என பிரிக்கப்பட்ட மக்கட்கூட்டத்தைச் சிந்திக்கவும், தலைநிமிர்த்தவும் செய்தவர்களில் சித்தர்கள் முதன்மையானவர்கள். சொர்க்கம்-நரகம், நல்வினை - தீவினை, பிறப்பு - இறப்பு, புண்ணியம்-பாவம் எனும் பாகுபாட்டு விசமத்தை தம் சுயநலத்திற்காகவே ஆரியர் விதைத்தனர். அறியாமை இருளைப் போக்க அருளாளர்கள் பலர் தோன்றினாலும், வீரத்துடன் தீரத்துடன் தம் கருத்துகளைப் பதிவு செய்தவர்கள் சித்தர்களே ஆவர். இதனைக்,

**"கறந்தபால் முலைபுகா கடைந்த வெண்ணெய் மோர்புகா**
**உடைந்துபோன சங்கின் ஓசை உயிர்களும் உடற்புகா**
**விரிந்தபூ விரிந்தகாயும் மீண்டும்போய் மரம்புகா**
**இறந்தவர் பிறப்பதில்லை இல்லை இல்லை இல்லையே"[10]**

என்ற வரிகள் புலப்படுத்துகின்றன. கறந்தபால் மீண்டும் மடிபுகாது. கடைந்தெடுக்கப்பட்ட வெண்ணெய் மீண்டும் மோர் ஆகாது என வாழ்வின் நியதியைக் கூறி, இறந்தவர்கள் மீண்டும் பிறப்பதில்லை என்ற உண்மையை அறியச்செய்கிறார்.

இவரைப்போலவே பாரதியாரும் சமுதாய விடுதலைக்கு தம் பங்களிப்பாகத் தோத்திரங்கள் கற்று சரிநிகர் ஆகுவோம் எனக் கூறியிருப்பது கவனிக்கத்தக்கது.

**மந்திரம் கற்போம் வினை தந்திரம் கற்போம்**
**வானை அளப்போம் கடல்மீனை அளப்போம்**
**சந்திர மண்டலத்தியல் கண்டு தெளிவோம்**
**சந்திப் பெருக்கெடுக்கும் சாத்திரம் கற்போம்"[11]**

என்னும் பாடல் வாயிலாக மந்திரங்கள், தந்திரங்கள் அறியாதார் அவற்றைக் கற்க வேண்டும். விண்ணை அளக்கும் கல்வியைக் கற்று, சந்திர மண்டலத்தை அளந்து உலகறியச் செய்துவிட்டால்இ சரி நிகராகி விடலாம் என அறிவுப்பாடம் புகட்டியிருப்பது மக்கள் சரிநிகராக வாழ்வதற்கான வழிமுறையாகும்.

## தொகுப்புரை

சிறு கூட்டமாக வந்தவர்கள் பெரும்பான்மை மக்களைக் கண்டு அஞ்சியவர்கள் தங்களைக் கடவுள் அவதாரமாகக் கூறி, பிரித்தாளத் தலைப்பட்டனர். இதன் விளைவே மக்கள் பல்வேறு நிலைகளிலும் பிரிந்து வாழலாயினர். மக்கள் தோற்றம் முதலாக தற்காலம் வரைக்கும் மக்களைக் காக்கும்பொருட்டு குரல் கொடுத்தும், அவர்களுக்கான அறியாமையைச் சுட்டி விடுதலை உணர்வை விதைத்து வந்தவர்களில் சித்தர்களும் பாரதியும் முதன்மையானவர்கள்.

## குறிப்புகள்

1. தமிழ்ப்பிரியன் சித்தர் பாடல்கள், ப.17
2. தமிழ்ப்பிரியன் மேலது ப.19
3. தமிழ்ப்பிரியன் சித்தர் பாடல்கள், பாடல் எண்: 9 ப.3
4. தமிழ்ப்பிரியன் மேலது,, பாடல் எண்: 39
5. ச. மெய்யப்பன் பாரதியார் பாடல்கள், பாடல் எண்: 10 ப.187
6. தமிழ்ப்பிரியன் சித்தர் பாடல்கள், ப.46
7. ச. மெய்யப்பன் பாரதியார் பாடல்கள˙, பாடல் எண்: 8 ப.247
8. தமிழ்ப்பிரியன் மேலது, ப.35
9. ச. மெய்யப்பன் பாரதியார் பாடல்கள், பாடல் எண்: 5 ப.151
10. தமிழ்ப்பிரியன், மேலது, பாடல் எண்: 47
11. ச. மெய்யப்பன், மேலது,, பாடல் எண்: 130